அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கை இல. 12/89

அரசாங்க நிருவாக, மாகாண சபைகள்,
உள்நாட்டலுவல்கள் அமைச்சு.
சுதந்திரச் சதுக்கம் - கொழும்பு. 7
1989 பெப்ரவரி 15 ஆந் தேதி.

அமைச்சுக்களின் செயலாளர்கள்,
திணைக்களங்களின் தலைவர்கள் அனைவருக்கும்.

அரசகரும மொழிகள் சட்டத்தை நடைமுறைப்படுத்தல் - ஒன்றுக்கு மேற்பட்ட மொழிகளில் தேர்ச்சியுடையவர்களை கண்டறிவதற்கான வொரு கணிப்பாய்வு

அரசாங்க சேவையில் (அரசாங்க கூட்டுத்தாபனங்கள், நியதிச்சட்ட சபைகள், பல்கலைக்கழகங்கள் முதலியனவற்றையும் உள்ளடக்கி) ஒன்றுக்கு மேற்பட்ட மொழிகளில் தேர்ச்சியுள்ளவர்கள் தொடர்பில் தரவைச் சேகரிப்பதெனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

02. 1988, பெப்ரவரி 11ஆந் தேதியிட்ட 5/88ஆம் இலக்க அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கையில் உள்ள ஊக்குவிக்களுக்குக் கூடுதலாக ஏற்கனவே வழங்கப்பட்டுள்ள ஊக்குவிக்களின் விளைவாக ஒன்றுக்குமேற்பட்ட மொழிகளில் அத்தகைய தேர்ச்சியைப் பெறுபவர்களின் எண்ணிக்கை எதிர்காலத்தில் அதிகரிக்குமென எதிர் பார்க்கப்படுகிறது.

03. அரசகருமமொழிகள் சட்டத்தை நடைமுறைப்படுத்தும் நோக்கில் அவர்களுடைய சிறப்புத் திறமையைப் பயன்படுத்துவதற்கு நான் கருதுகின்றமையினால் அவர்களைப் பற்றிய வொரு அறிக்கையை இத்துடன் இணைக்கப்பட்டுள்ள படிவத்தைப் பயன்படுத்தி 1989.03.28 ஆந் தேதியன்றோ அதற்கு முன்னரோ அரசகரும மொழிகள் ஆணையாளருக்கு அனுப்புக.

(அ) தங்களுடைய அமைச்சில்/திணைக்களத்தில்/நிறுவனத்தில் அத்தகைய உத்தியோகத்தர்கள் இல்லாதிருப்பின் இன்மை அறிக்கையொன்று அனுப்பப் படல் வேண்டும்.

(ஆ) பிற்பட்ட அறிக்கை அரையாண்டு அடிப்படையில் அனுப்பப்படல் வேண்டும்.

(இ) அடுத்த கிரமமான அறிக்கை 1990, சனவரி 15ஆந் தேதிக்கு முன் ஆணையாளரைச் சென்றடையுமாறு அனுப்பப்படல் வேண்டும்.

04. உத்தியோகத்தர்களினால் ஏற்கனவே பெறப்பட்ட தேர்ச்சியில் புதிய சேர்க்கை அல்லது முன்னேற்றம் ஏற்படாமலிருந்தால் அதன்பின்னர் இன்மை அறிக்கையொன்று அனுப்புமாறு தாங்கள் கோரப்படுகிறீர்கள்.

05. மேலும், இந்த காலாந்தர அறிக்கையை அனுப்புவதற்கான பொறுப்பைத் தாங்கள் எந்தப் பதவிநிலை உத்தியோகத்தரிடம் ஒப்படைக்கிறீர்களோ அந்த உத்தியோகத்தரின் பெயரையும் பதவிப் பெயரையும் தொலைபேசி இலக்கத்தையும் அரசகரும மொழிகள் ஆணையாளருக்குத் தாங்கள் அறிவித்தல் வேண்டும்.

சிறில் கமகே.
செயலாளர்,
அரசாங்க நிருவாக, மாகாண சபைகள்,

(அரசகரும மொழி ஆணையாளர், வைட் எவேய்ஸ் கட்டிடம், சேர் பாரன் ஜயதிலக்க மாவத்தை, கொழும்பு.01)
ஒன்றுக்கு மேற்பட்ட மொழிகளில் தேர்ச்சியுடையவர்கள் பற்றிய 1989.02.28ஆம் திகதியிட்ட 12/89 இலங்கை அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கையின் கீழ்...............ல் அரசகரும மொழிகள் ஆணையாளருக்கு சனவரி 15ஆந் தேதிக்கு/யூலை 15ஆந் திகதிக்கு முன் அனுப்பப்பட வேண்டுமென விதிக்கப்பட்ட அரையாண்டு அறிக்கை.

அமைச்சு/திணைக்களம் அல்லது நிறுவனம்

| உத்தியோகத்தரின் பெயர் | பதவிப்பெயர் அல்லது சேவை அல்லது தரண்டும் | உத்தியோகபூர்வ முகவரியும் தொலைபேசி இலக்கமும் | தனிப்பட்ட முகவரியும் தொலைபேசி இலக்கமும் | மொழித் தேர்ச்சி பற்றிய விவரங்கள் | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | தமது சொந்த மொழி தவிர்ந்த பிற மொழிகள் | பின்பற்றிய மொழிக்கல்வி நெறிகள், சித்தியெய்திய பரீட்சைகளும் அடைந்த தரங்களும் | தமது சொந்த மொழி தவிர்ந்த பிறமொழி கற்பித்தலில் அனுபவம் | மொழிபெயர்ப்பு அனுபவம் ஆண்டுகளின் எண்ணிக்கை | பிறமொழிகளைத் தட்டச்சிடுவதிலுள்ள அனுபவம், ஆண்டுகளின் எண்ணிக்கையும் மொழியும் | அவரது சொந்தமொழி தவிர்ந்த பிறமொழியில் வாய்வழித் தேர்ச்சி மொழியைக் குறிப்பிடுக. |
| | | | | | | | | | |